04.03.2025

O.S.No.361/2023

**வா.சா. 1 : விஜயகுமாரி**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–**

1) பாக பிரிவினை சொத்து இதற்கு முன்பாக எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் என் மாமனார் பெரியசாமிக்கு பூர்வீக சொத்து. அவருக்கு எதன் மூலம் பாத்தியப்பட்டது என்றால் 19.12.2004ல் அவர் கிரையம் பெற்றுள்ளார். என் மாமனார் உயிருடன் தான் உள்ளார். அவர் கிரையம் பெற்ற சொத்தை தான் அவரும் அவரின் மகனுகளும் பாகம் பிரிந்த்து கொண்டார்கள் என்றால் சரிதான்.

2) 1, 4 வது பிரதிவாதிகள் தான் 2ம் பிரதிவாதியின் மகன்கள். எனக்கும், என் கணவருக்கு விவாகரத்து ஆகவில்லை. நான் என் அம்மாவின் வீட்டில் குடியிருந்து வருகிறேன். 3 வருடமாக வாழ்ந்து வருகிறேன். என் கணவர் குடித்துவிட்டு என்னை அடித்துவிட்டதால் நான் அவருடன் சேர்ந்து வாழவில்லை. சேர்ந்து வாழ நான் எந்த நடவடிக்கை எடுக்கவில்லை. ஜீவானசம் கோரி நான் வேறு எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை.

3) என் கணவர் என்னுடன் சேர்ந்து வாழ என் வீட்டிற்கு வந்தார் என்றால் சரிதான். அவர் குடித்து விட்டு வந்து தகராறு செய்தார். குழந்தைகள் பற்றி பேசவில்லை. கடைசியாக நான் என் கணவருடன் என்ன சொன்னேன் என்றால் என் பிள்ளைகளுக்கு வழி சொல்லுங்கள் என்று சொன்னேன். பெரியசாமிக்கு விலைக்கு வாங்கிய சொத்தும், அவருக்கு பாகக்கிரார் சொத்து உள்ளது என்று சொன்னால் சரிதான்.

4) மேற்படி சொத்துக்கள் எதுவும் பூர்வீக சொத்துக்கள் கிடையாது என்றால் சரியல்ல. என் மாமனாருக்கு பிரிந்த சொத்துக்கள் தனிப்பட்ட சொத்துக்கள் என்றும், அவர் விலைக்கு வாங்கிய சொத்து அவரின் சுய சம்பாத்திய சொத்து என்றும், என் மாமனாரும் அவருடைய மகன்களும் சேர்ந்து சம்பாத்திய சொத்து என்பதால் என் மாமனார் அவருடைய மகன்களுடன் சேர்ந்து 2011ல் பாக கிரார் செய்து கொண்டார்கள் என்றால் பாக கிரார் செய்து கொண்டது தெரியும்.

5) எனவே 2, 3 வாதிகளுக்கு மூதாதையர் சொத்து என்ற ஒரு அமைப்பு தாவா சொத்துக்களுக்கு வராது என்றும், எனவே இந்து வாரிசு உரிமை சட்டப்படி அதில் 2, 3 வாதிகள் பாகம் கோர உரிமையில்லை என்றால் சரியல்ல. நான் ஜீவனாம்சம் கோரி எவ்வித உத்தரவு பெறவில்லை என்றும், நிலுவை தொகை கோரி நான் இந்த வழக்கை தாக்கல் செய்ய முடியும் தவிர ஜீவனாம்சம் கோரி வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கதக்கது அல்ல என்றும், தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. நான் ஜீவனாம்சம் கோரியோ, பாகம் கோரியோ அறிவிப்பு எதுவும் அனுப்பில்லை என்றால் சரிதான்.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S
Digitally signed by GANESAN S
Date: 2025.03.04 18:28:15 +0530

Subordinate Judge, Attur.